**கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**மூ.மு.எண். 10764/ அ1/2024 நாள். .12.2024**

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில், இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு. பொ. பாலகிருஷ்ணன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 01.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்–சார்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வித்துறை நாள்.09.09.2022.
2. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 4828/அ1/2023, நாள்.30.11.2023
3. சார்ந்த பணியாளரின் விண்ணப்பம் நாள்.05.12.2024

******

பதவி உயர்வு மூலம் ரிஷிவந்தியம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 01.12.2023 முற்பகல் பணிநியமனம் பெற்ற திரு.பொ.பாலகிருஷ்ணன் என்பார் பணி மாறுதல் மூலம் கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணபுரிந்து வருகிறார்.

அன்னாருக்கு பார்வை 2–ல் கண்டவாறு கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளதால், அன்னார் பணியேற்ற நாளான 01.12.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை தகுதிகாண் பருவகாலமாக முடிக்கப்பட வேண்டுமெனவும், தகுதிகாண் பருவகாலத்தில் முடிக்கப்பட வேண்டிய துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர்தான் இரண்டாவது ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்
கள்ளக்குறிச்சி

12/12/24

பெறுநர்– திரு.பொ.பாலகிருஷ்ணன்,
இளநிலை உதவியாளர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
கள்ளக்குறிச்சி.

நகல்– இவ்வலுவலக கோப்பிற்கு.